# முசிறி மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ஆணை பிறப்பிப்பவர் - திரு. கோ. பாரதி விவேகானந்தன், எம்.எஸ்.ஸி., எம்.எட்., எம்.பில்.,

ந.க.எண். 3812 / அ1 / 2021, நாள். .03.2022.

பொருள் தமிழ்நாடு அமைச்சுப்பணி - கருணை அடிப்படை பணி நியமனம் - திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் ஒன்றியம், செங்காட்டுப்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் இடைநிலை ஆசிரியராக பணிபுரிந்த காலத்தில் 13.11.1992 அன்று காலமான திரு. ந. பொன்னுசாமி என்பாரின் வாரிசுதாரர் திரு. பொ. ஆனந்தன் என்பாருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டது - நியமன நாளான 27.09.1999 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடல் - தொடர்பாக.

பார்வை
1. முசிறி மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந. க.எ ண். 6034/அ1 / 1998, நாள். 24.09.1999.
2. செங்காட்டுப்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியரின் ந. க. எண். 54 / 2014, நாள். 27.07.2021.
3. திருச்சிராப்பள்ளி முதன்மைக் கல்வி அலுவலரின் அ. தி. மு. எண். 6497 / அ1 / 2021, நாள். 06.09.2021.
4. அரசாணை (நிலை) எண்.80 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ1) த்துறை நாள். 02.03.2016

****************

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் ஒன்றியம், செங்காட்டுப்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் இடைநிலை ஆசிரியராக பணிபுரிந்து வந்த திரு. ந. பொன்னுசாமி என்பார் 13.11.1992 அன்று பணியிலிருந்த போது இறந்த விட்டதால் அவரது மகன் திரு. பொ. ஆனந்தன் என்பாருக்கு கருணை அடிப்படையில் 27.09.1999 முற்பகல் முதல் தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ், துறையூர் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக தற்காலிக அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட தனியரின் பணியினை 27.09.1999 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யக் கோரும் கருத்துருக்கள் பெறப்பட்டது.

இந்நிலையில் பார்வை(4)இல் காணும் அரசாணையில் பத்தி 6-1, 6-2, 6-3ல் 01.02.2016 வரை கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களில் எவ்வித விதித்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணியினை வரன்முறைப்படுத்தி செயல்முறை ஆணையை சம்பந்தப்பட்ட பணியாளருக்கு வழங்குமாறு நியமன அலுவலருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தொடர்புடைய அரசுப்பணியாளரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த.பி.பா.)

எனவே, பார்வை (4)இல் காணும் அரசாணையின்படி, கீழ்காணுமாறு நிபந்தனையின் அடிப்படையில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பணியாளர் பெயர் / பதவி, நியமனம் செய்யப்பட்ட பள்ளி | இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்படும் நாள். |
|---|---|---|---|
| 1 | திரு. பொ. ஆனந்தன், இளநிலை உதவியாளர், அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, துறையூர். | 27.09.1999 முற்பகல் | 27.09.1999 முற்பகல் |

<u>நிபந்தனை -</u>

பணிவரன்முறை செய்யப்பட்ட விவரத்தினை சம்பந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவு மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும், மேலும் தனியரின் பணியினை வரன்முறைபடுத்திய பின் 1954ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப்பணியாளரின் தேர்வாணைய ஒழுங்கு முறைகளில் ஒழுங்குமுறை 16(பி)-இன் கீழ் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் பொருட்டு சம்பந்தப்பட்ட பணியாளரின் பணிவரன்முறை ஆணை நகல் மற்றும் பணிவரன்முறை செய்யப்பட்ட விவரம் பதிவு செய்யப்பட்ட பணிப்பதிவேட்டின் பக்க நகல் ஆகியவற்றுடன் உரிய முன்மொழிவுகளை உடன் அனுப்பி வைக்கப்பட வேண்டுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர் மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தினை நிறைவு செய்ய வேண்டும். நடைமுறையில் உள்ள விதிகளுக்கு உட்பட்டு பவானிசாகர் அடிப்படை பயிற்சி மற்றும் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்ச்சி பெற்று தகுதிகாண் பருவம் முடித்த பிறகு உரிய விதிகளின்படி இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் அனுமதிக்கப்பட வேண்டும்.

இவ்வாணையினை பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புதலினை உடன் அனுப்பி வைக்க செங்காட்டுப்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

இணைப்பு - பணிப்பதிவேடு - 1

பணிவரன்முறை ஆணை அசல் - 2 பிரதிகளில்.

கல்விச் சான்றுகள் - அசல்

Sankar 29/3/2022

மாவட்டக் கல்வி அலுவலர்,

25/3/22 முசிறி.

பெறுநர் -

1. தலைமை ஆசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, செங்காட்டுப்பட்டி.
2. சம்பந்தப்பட்ட பணியாளர் ( தலைமை ஆசிரியர் வழியாக )

நகல் - தலைமை ஆசிரியர், அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, துறையூர்.

நகல் - திருச்சிராப்பள்ளி முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.

உபரி - 2